விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை ஆவண வழக்கு எண். 170/2025

CNR.No.TNTH080003512025

புகார்தாரர்	பா.சந்திரபாண்டி (வயது 48/2026), த/பெ.பால்ராஜ், கதவு எண்.236A/W–17, சீப்பாலக்கோட்டை ரோடு, சின்னமனூர், உத்தமபாளையம் தாலுகா, தேனி மாவட்டம்.
எதிரி	சி.நாகையசாமி (வயது 46/2026), த/பெ.சின்னராமையா, கதவு எண்.2/210, மேலத்தெரு, சந்தையூர், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம்.
குற்றம் முறையிட்டது	மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ்
காசோலை எண். (451532)	01.02.2025
காசோலை தொகை	Rs.2,00,000/–
வசூலுக்கு தாக்கல் செய்த நாள்	06.03.2025
காசோலை திரும்பிய நாள்	07.03.2025
காசோலை திரும்பிய காரணம்	Funds Insufficient
அறிவிப்பு அனுப்பிய நாள்	15.03.2025
அறிவிப்பு பெறப்பட்ட நாள்	17.03.2025
வழக்கு தாக்கல் நாள்	21.04.2025
தீர்ப்பு நாள்	29.05.2026
புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர்	திரு.A.பிரபு
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.M.அழகேசன்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:55:59 +0530

தீர்வு	**எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(1)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

தீர்ப்புரை

1. புகார்தாரர் வழக்கு சுருக்கம்:

புகார்தாரரும், எதிரியும் 5 வருடங்களுக்கு மேலாக நல்ல நண்பர்கள். அதன் அடிப்படையில் எதிரி அவரது தொழில் அபிவிருத்திக்காகவும், குடும்ப சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் வேண்டி புகார்தாரரிடம் கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 01.02.2025ம் தேதி ரூ.2,00,000/–ஐ தனது வீட்டில் வைத்து எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 01.02.2025 நாளிட்ட 451532 என்ற எண் கொண்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, வங்கி, சாப்டூர் கிளைக்குரிய ரூ.2,00,000/–த்திற்கான காசோலையை கொடுத்துள்ளார். அந்த காசோலையை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள பெடரல் வங்கி, சின்னமனூர் கிளையில் 06.03.2025ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 07.03.2025 அன்று திரும்பியது. காசோலை தொகையை கேட்டு எதிரிக்கு 15.03.2025 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 17.03.2025ம் தேதி எதிரி பெற்று கொண்டு, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலையின் தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:05 +0530

142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் குற்றச்சாட்டு" என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

புகார்தாரர் திரு.சந்திரபாண்டி தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 01.02.2025–ம் தேதியிட்ட 451532 என்ற எண் கொண்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, சாப்டூர் கிளைக்குரிய ரூ.2,00,000/–க்கான அசல் காசோலை ம.சா.ஆ.1 என்றும், மேற்படி காசோலை "Funds Insufficient" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 07.03.2025ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 என்றும், மேற்படி காசோலைக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 15.03.2025 நாளிட்ட சட்ட அறிவிப்பு இரசீது அலுவலக நகல் ம.சா.ஆ.3 என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 17.03.2025ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 என்றும், புகார்தாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.5 என்று மேற்படி ஆவணங்களை முக்கிய சான்றாவணங்களாக ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:14 +0530

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சியம் என்றும், நான் வேறொரு நபருக்கு கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலை தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையது தான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எதிரி தரப்பில் எ.சா.1 நாகையசாமி தனது சாட்சியத்தில், புகார்தாரரை பார்த்துள்ளேன், ஆனால் பழக்கம் இல்லை. 13.07.2023 ம் தேதியன்று ஒரு லாரி வாங்குவதற்காக சின்னமனூரில் உள்ள இரத்தினம் மோட்டார் பைனான்ஸ் உரிமையாளர் பிரபு சமத்துவம் என்பவரிடம் ஒரு காசோலை மற்றும் ரூ.100 பத்திரத்தை கொடுத்து ரூ.1 லட்சம் கடன் வாங்கினேன். அதற்கு 10 மாத்தில் ரூ.1,20,000/– வட்டியுடன் சேர்த்து தருவதாக கூறி பணம் வாங்கினேன். என்னுடைய G pay எண்ணிலிருந்து பிரபு சமத்துவம் G pay எண்ணிற்கு ரூ.46,000/– செலுத்தியுள்ளேன். நேரடியாக ரூ.74,000/– பணம் பிரபு சமத்துவத்திடம் கொடுத்துள்ளேன்.

6.2. மே 16, 2024 ல் பணத்தை கொடுத்துவிட்டேன். நான் வெளியூரில் வாகனம் ஓட்டியதால் காசோலையை அவர் தராமல் இழுத்து அடித்தார். மார்ச் 10, 2025 ல் நான் கொடுத்த காசோலையில் சந்திரப்பாண்டி என்ற பெயரை நிரப்பி எனது வாட்ஸ் ஆப்பிற்கு பிரபு சமத்துவம் அனுப்பி என்னை மிரட்டினார். நான் போன் செய்து கேட்டபோது அவர் மிரட்டினார். மறுநாள் வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துவிட்டார். நான் நேரடியாக வந்து பேசுவதாக கூறிய

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:20 +0530

பின்னரும் பொய் வழக்கு தாக்கல் செய்துவிட்டார். சந்திரபாண்டியிடம் எனக்கு கொடுக்கல் வாங்கல் இல்லை. தனது வங்கி கணக்கிலிருந்து பிரபு சமத்துவத்திற்கு G pay மூலம் ரூ.46,000/– செலுத்தியதற்கான வங்கி பரிவர்த்தனை நகலை எ.ம.சா.ஆ.1 ஆகவும், எனது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த விபரத்தை பிரபு சமத்துவம் தனது தொலைபேசி வாட்ஸ் அப்பிற்கு அனுப்பியதற்கான ஆவணத்தை எ.ம.சா.ஆ.2 ஆகவும் தாக்கல் செய்துள்ளார்.

6.3. எ.சா.2 பிரபு சமத்துவம் தனது சாட்சியத்தில், எதிரியை தெரியும். நான் கம்பத்தில் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்துள்ளேன். அதில் எதிரி பொருட்கள் வாங்குவார். எதிரி என்னிடம் ரூ.1 லட்சம் கடனாக பணம் வாங்கி உள்ளார். மேற்படி பணத்தில் எனக்கு 45 ஆயிரம் வரை எதிரி திருப்பி செலுத்தியுள்ளார். புகார்தாரரை எனக்கு தெரியும். புகார்தாரர் ஒரு சமுதாயத்தில் தலைவராக இருக்கிறார். நானும் ஒரு சமுதாயத்தில் பொறுப்பில் இருக்கிறேன், அதன் மூலம் புகார்தாரரை எனக்கு தெரியும். புகார்தாரருக்கும், எனக்கும் நெருங்கிய நட்பு இல்லை. 7502502057 எனது தொலைபேசி எண்ணாகும். எ.சா.ஆ.1 ல் உள்ள தொலைபேசி எண் என்னுடையதுதான்.

6.4. எ.சா.ஆ.1 ல் உள்ள தொகையை எதிரி எனக்கு செலுத்தியுள்ளார். எ.சா.ஆ.2 ல் உள்ள தொலைபேசி எண் என்னுடையதுதான். எதிரி எனக்கு பணம் கொடுப்பதற்காக எ.சா.ஆ.2 ல் உள்ள காசோலை மற்றும் அதன் இரசீதை நான் அனுப்பினேன். எ.சா.ஆ.2 ல் உள்ள காசோலை என்னிடம்தான் இருந்தது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் நானும், புகார்தாரரும் உள்ளோம். மேற்படி புகைப்படங்கள் எ.சா.ஆ.3 ஆகும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் முன்வைத்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன காசோலையும், அதிலுள்ள

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:27 +0530

கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால், மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. எதிரி காசோலையை கொடுத்ததாக சொல்லப்படும் பிரபு சமத்துவம் என்பவர் மீதோ அல்லது புகார்தாரர் மீதோ காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டு, எதிரி தரப்பை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. ரத்தினம் பைனான்ஸிடம் எதிரி பணம் பெற்றதற்கும், புகார்தாரரிடம் எதிரி பணம் பெற்றதற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. புகார்தாருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி ரூ.2,00,000/- கடனாக வாங்கவில்லை. கடந்த 13.07.2023ம் தேதியன்று ஒரு லாரி வாங்குவதற்காக சின்னமனூரில் உள்ள இரத்தினம் மோட்டார் பைனான்ஸ் உரிமையாளர் பிரபு சமத்துவம் என்பவரிடம் கொடுத்த தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரபு சமத்துவம் என்பவரிடம்தான் எதிரி பணம் பெற்று காசோலையை கொடுத்தார் என்பதை எ.சா.2 சாட்சியம் மற்றும் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. புகார்தாரருக்கும், பிரபு சமத்துவத்திற்கும் நெருங்கிய பழக்கம் உள்ளது என்பதை எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. புகார்தாரருக்கு காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை. காசோலையை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களையும் புகார்தாரர் தாக்கல் செய்யவில்லை. எதிரி காசோலை தொகையை செலுத்த கடமைப்பட்டவர் இல்லை. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:35 +0530

அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 01.02.2025-ம் தேதியிட்டு ரூ.2,00,000/-க்கு கொடுத்த ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, சாப்டூர் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலையானது உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- மேற்படி காசோலையானது கடந்த 07.03.2025ம் தேதியன்று Funds Insufficient என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு பெடரல் வங்கி, சின்னமனூர் கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- காசோலை திரும்பியது குறித்து 15.03.2025-ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

- மேற்படி அறிவிப்பை 17.03.2025-ம் தேதியன்று எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:42 +0530

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலையானது எதிரியின் காசோலைதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)-ன்படி வழக்கு காசோலை மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி காசோலையில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139-ன் படி காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் சங்கதிகள் யாதெனில்,

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:50 +0530

"எதிரி ரூ.2,00,000/− கைமாற்று கடன் வாங்கவில்லை என்றும், 13.07.2023 ம் தேதியன்று லாரி வாங்குவதற்காக சின்னமனூரில் உள்ள இரத்தினம் மோட்டார் பைனான்ஸ் உரிமையாளர் பிரபு சமத்துவம் என்பவரிடம் பெற்ற ரூ.1,00,000/− கடனுக்கு ஆதரவாக கொடுத்த தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுக்கப்பட்டுள்ளது.

10.5. புகார்தாரர் அவரது நிரூபண சாட்சியத்தில், எதிரியின் தொழில் அபிவிருத்திக்காகவும், குடும்ப சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும், கடன் பெற்றதாக கூறியுள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி தாவா காசோலையை கொடுத்தார். அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Funds Insufficient என காரணம் குறிப்பிட்டு காசோலையானது திருப்பப்பட்டது.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் தாவா காசோலையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலை வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பு அனுப்பியதற்கு ம.சா.ஆ.4 ஆன ஒப்புதல் அட்டையை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் அட்டையை பரிசலீனை செய்கையில் பாண்டிச்செல்வி என்ற கையொப்பம் உள்ளது. ஆனால் மேற்படி கையொப்பமானது தனது மனைவியின் கையொப்பம் இல்லை என்று எதிரி அவரது சாட்சியத்தில் மறுத்துள்ளார். இந்நிலையில் ம.சா.ஆ.4 ல் உள்ள கையொப்பமானது எதிரியின் மனைவியின் கையொப்பம்தான் என்பதை நிரூபிப்பதற்கு புகார்தாரர் தரப்பில் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

10.7. புகார்தாரர் வழக்கு சம்பந்தமாக எதிரியிடம் முதல்கேள்வி கேட்டபோது பொய்வழக்கு என்று அவர் மறுத்துள்ளார். எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோது, எதிரி, புகார்தாரரிடம் காசோலை

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:56:59 +0530

தொகையை வாங்கவில்லை என்றும், சின்னமனூர் ரத்னா மோட்டார்ஸ் பைனான்ஸ் நிறுவனத்தில் எதிரி வாங்கிய ரூ.1,00,000/- கடனுக்கு ஆதரவாக காசோலை கொடுக்கப்பட்டது என மறுத்துள்ளார். மேலும் எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS கேள்வி கேட்டபோது, நான் வேறொரு நபருக்கு கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று மறுத்துள்ளார்.

10.8. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது சாட்சியத்தில், 13.07.2023 ம் தேதியன்று லாரி வாங்குவதற்காக சின்னமனூரில் உள்ள இரத்தினம் மோட்டார் பைனான்ஸ் உரிமையாளர் பிரபு சமத்துவம் என்பவரிடம் பெற்ற ரூ.1,00,000/- கடனுக்கு ஆதரவாக கொடுத்த தாவா காசோலையை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று மறுத்துள்ளார்.

10.9. மேற்படி ரத்தினம் மோட்டார்ஸ் நிறுவனத்தைப்பற்றி தெரியாது என்று புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார். அதனால் ரத்தினம் மோட்டார்ஸ் உரிமையாளர் என்று கூறும் பிரபு சமத்துவம் என்பதை எதிரி தரப்பு 2 வது சாட்சியாக விசாரிக்கப்பட்டது. மேற்படி எ.சா.2 பிரபு அவரது சாட்சியத்தில், தான் ஸ்பேர்பார்ட்ஸ் கடை வைத்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால் சின்னமனூரில் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வரவில்லை என்று எ.சா.2 கூறியுள்ளார்.

10.10. எதிரி அவரது சாட்சியத்தில், எனது வங்கி கணக்கிலிருந்து பிரபு சமத்துவத்திற்கு ஜி-பே மூலம் ரூ.46,000/- செலுத்தியுள்ளதாக கூறி அதற்கான பரிவர்த்தனையை எ.சா.ஆ 1 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி எ.சா.ஆ 1-ல் உள்ள தொலைபேசி எண் தன்னுடையதுதான் என்றும், அதில் உள்ள தொகையை எதிரி செலுத்தியுள்ளார் என்பதை எ.சா.2 பிரபு சமத்துவம் ஒப்புக்கொண்டுள்ளார். எ.சா.ஆ.1 யை பரிசீலனை செய்கையில், அதில் ரத்தினம் மோட்டார்ஸ் என்ற பெயர் குறிப்பிட்டுள்ளது. ஆகையால் எ.சா.2 பிரபு சமத்துவம் ரத்தினம் மோட்டார்ஸ் நடத்தி வருகிறார் என்று தெரியவருகிறது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:57:06 +0530

10.11. புகார்தாரரும், எ.சா.2ம் நெருங்கிய நண்பர்கள் இல்லை என்று புகார்தாரர் தரப்பில் வாதிக்கப்பட்டது. மேலும் புகார்தாரரும், எ.சா.2 ஆன பிரபு சமத்துவம் என்பவரும் நெருங்கிய நண்பர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் எ.சா.2ன் மூலம் எதிரி தரப்பில் எ.சா.ஆ.3 ஆன புகைப்படங்கள் (3–எண்ணம்) தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகைப்படங்களை பரிசீலனை செய்கையில், புகார்தாரருக்கும், எ.சா.2 பிரபு சமத்துவம் என்பவருக்குமிடையே நெருங்கிய பழக்கம் உள்ளது என்று தெரியவருகிறது.

10.12. புகார்தாரருக்கும், எ.சா.2க்கும் இடையே உள்ள பழக்கத்தின் அடிப்படையில் எ.சா.2யிடம் கொடுத்த காசோலையை புகார்தாரரிடம் கொடுத்து பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளதாக எதிரி தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேலும் எ.சா.2–யிடம் தாவா காசோலையை பொறுப்பிற்காக கொடுத்ததாகவும், மார்ச் 10, 2022ம் தேதியன்று காசோலையில் சந்திரபாண்டி என்ற பெயரை நிரப்பி எனது வாட்ஸ் ஆப்பிற்கு பிரபு சமத்துவம் அனுப்பி மிரட்டினார் என்று எதிரி சாட்சியம் அளித்தும், எதிரியின் தொலைபேசி வாட்ஸ் ஆப்பிற்கு பிரபு சமத்துவம் அனுப்பிய குறுஞ்செய்தியை எ.சா.ஆ.2 ஆக எதிரி குறியீடு செய்துள்ளார்.

10.13. எ.சா.ஆ.2 ஆவணத்தை பார்க்கையில், காசோலையில் சந்திரபாண்டி என்பவரின் பெயரை பூர்த்தி செய்தும், காசோலையை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான ரசீது மற்றும் வங்கியிலிருந்து திருப்பிய மெமோவை பிரபு சமத்துவம் எதிரிக்கு அனுப்பியுள்ளார் என்பது தெரியவருகிறது. மேற்படி எ.சா.ஆ.2ல் உள்ள தொலைபேசி எண் மற்றும் மேற்படி குறுஞ்செய்தியை நான்தான் அனுப்பினேன் என்று எ.சா.2 பிரபு சமத்துவம் அவரது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார்.

10.14. மேலும் தாவா காசோலையானது தன்னிடம்தான் இருந்தது என்று எ.சா.2 பிரபு சமத்துவம் அவரது முதல் விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எதிரி அவரது சாட்சியத்தில், பிரபு சமத்துவத்திடம் ரூ.1,00,000/– கடன் வாங்கினார் என்றும், தாவா காசோலையை எ.சா.2 யிடம்தான் கொடுத்தார் என்று

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:57:13 +0530

கூறிய விபரங்களை எ.சா.2 அவரது முதல் விசாரணையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ள காரணத்தினாலும், எ.சா.2 க்கும், புகார்தாரருக்கும் இடையே நெருங்கிய பழக்கம் உள்ளது என்று தெரிகின்ற காரணத்தினாலும், எதிரி எ.சா.2 பிரபு சமத்துவத்திடம் கொடுத்த காசோலையை வைத்துதான் புகார்தாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற சந்தேகம் எழுகிறது. இந்நிலையில் தாவா காசோலையை புகார்தாரரிடம்தான் எதிரி கொடுத்தார் என்பதை நிரூபிக்கும் சுமையானது புகார்தாரருக்கே உள்ளது. ஆனால் அதனை நிரூபிக்கும் வகையில் தாவா காசோலையை தவிர வேறு எந்த ஆவணத்தையும் புகார்தாரர் தாக்கல் செய்யவில்லை.

10.15. மேலும் புகார்தாரர் தரப்பு வாதத்தில், தாவா காசோலையானது புகார்தாரரிடம்தான் இருந்தது என்றும், எ.சா.2 யிடம் எதிரி கடன் வாங்கியிருந்ததால் புகார்தாரர் தாவா காசோலையை எ.சா.2–ற்கு அனுப்பினார் என்று வாதிக்கப்பட்டது. ஆனால் எ.சா.2 அவரது முதல் விசாரணையில், **"எதிரி எனக்கு பணம் கொடுப்பதற்காக எ.சா.ஆ.2 ல் காசோலை மற்றும் ரசீதை தான் அனுப்பினேன்"** என்று கூறியுள்ளார். மேற்படி எதிரி எ.சா.2 ற்கு கொடுக்க வேண்டிய தொகைக்காகத்தான் காசோலை மற்றும் ரசீதை எ.சா.2 எதிரிக்கு அனுப்பியுள்ளார் என்று எ.சா.2 ஒப்புக்கொண்டுள்ளார். இந்நிலையில் புகார்தாரர் தரப்பு வாதமானது ஏற்புடையதாக இல்லை என்று முடிவு செய்கிறது.

10.16. மேலும் புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில், காசோலையை தவிர்த்து எதிரியின் அடையாள அட்டையை நான் வாங்கினேனா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். பொதுவாக ஒரு நபரின் அடையாள அட்டையை பெறாமல் மற்றொரு நபர் கைமாற்றுக்கடன் கொடுக்க வாய்ப்பில்லை என்று கருதப்படுகிறது. எதிரியின் அடையாள அட்டையை புகார்தாரர் பெறவில்லை என்று கூறியுள்ள நிலையில், எதிரியின் முகவரியானது புகார்தாரருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று முடிவு செய்கிறது. மேலும்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:57:20 +0530

எ.சா.2 யிடம் இருக்கும் எதிரியின் முகவரியை பெற்றுதான் புகார்தாரர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று தெரியவருகிறது.

10.17. மேலும் புகார்தாரர் அவரது புகார்மனுவில், இரண்டு மாதத்திற்குள் அதாவது 2025 வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரத்திற்குள் எதிரி பணம் கொடுப்பதாக உறுதிகூறினார் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் புகார்தாரர் அவரது சாட்சியத்தில், எதிரி 10 நாட்களில் காசோலை தொகையை திருப்பித்தருவதாக கூறினார் என்று சாட்சியம் அளித்து அவரது புகார்மனுவில் உள்ள விபரங்களுடன் முரண்பட்டுள்ளார்.

10.18. இவ்வழக்கில் எதிரி தாவா காசோலையை எ.சா.2 பிரபு சமத்துவம் என்பவரிடம்தான் கொடுத்தார் என்று எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணம் மூலம் நிரூபித்துள்ள நிலையில், புகார்தாரர் வழக்கின் மீது சந்தேகம் எழுகின்றது. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்பட்டுள்ளது என்று முடிவு செய்கிறது.

10.19. இவ்வழக்கில் புகார்தாரர் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எதிரி காசோலை தொகையை புகார்தாரரிடம் கைமாற்று கடனாக வாங்கினார் என்று நிரூபிக்கும் வகையில் காசோலையைத் தவிர்த்து வேறு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை மற்றும் வேறு நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. ஆகையால் காசோலையில் கண்ட தொகையானது சட்டத்தினால் வலியுறுத்தக்கூடியது அல்ல என்று தீர்வு காண்கிறது. மேலும், இவ்வழக்கில் புகார்தாரர் நீதிமன்றத்திற்கு தூயகரங்களுடன் அணுகவில்லை என்பதால் எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றச்சாட்டு சந்தேகமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:57:29 +0530

10.20. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138-ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவு:

முடிவாக எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1)-ன் B.N.S.S கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் மே மாதம் 29-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:57:35 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.

1. புகார்தாரர் தரப்பு சாட்சி:

1	ம.சா.1	திரு.சந்திரபாண்டி (புகார்தாரர்)

2. புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:

1	ம.சா.ஆ.1	01.02.2025 நாளிட்ட 451532 என்ற எண் கொண்ட ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கி, சாப்டூர் கிளைக்குரிய ரூ.2,00,000/-க்கான காசோலை அசல்
2	ம.சா.ஆ.2	07.03.2025 நாளிட்டு Funds Insufficient என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல்
3	ம.சா.ஆ.3	15.03.2025 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்
4	ம.சா.ஆ.4	17.03.2025 நாளிட்டு அறிவிப்பினை எதிரி பெற்று

		கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல்

3. புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்: இல்லை

4. எதிரி தரப்பு சாட்சிகள்:

1	எ.ம.சா.1	திரு.நாகையசாமி
2	எ.ம.சா.2	திரு.பிரபு சமத்துவம்

5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்:

1	எ.சா.ஆ.1	எதிரியின் வங்கி கணக்கிலிருந்து பிரபு சமத்துவத்திற்கு G Pay மூலம் ரூ.46,000/- செலுத்தியதற்கான வங்கி பரிவர்த்தனை நகல்
2	எ.சா.ஆ.2	எதிரியின் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த விபரத்தை பிரபு சமத்துவம் எதிரியின் தொலைபேசி வாட்ஸ் ஆப்பிற்கு அனுப்பியதற்கான ஆவணம்
3	எ.சா.ஆ.3	புகார்தாரரும், பிரபு சமத்துவமும் உள்ள புகைப்படங்கள்

6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 17:57:42 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.